மனாஃபிவுல் ஹகாயிக்
பி துர்ஜஃபரி கஸாயிதி

இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி)

நாயகம் அவர்களின்

மகிமை

(இமாம் அவர்களின் இஸ்முகள் அடங்கிய
அஸ்மாவுல் அக்பரிய்யா இணைந்த புதிய பதிப்பு)

வெளியீடு:

M.H. ஹாஜா சம்சுதீன் சாஹிபு

நாகூர் பாதுஷா நாயகம்
வழித் தோன்றல்

Powered by CamScanner

காப்பிரைட் - 1977

இந்த புத்தகத்தின் எந்த பாகத்தையாவது அல்லது முழு புத்தகத்தையாவது எவ்விதமாகவும், எங்களின் எழுத்து மூலமான உத்திரவில்லாமல் தமிழகம், வெளிமாநிலம், வெளிநாடுகளில் அச்சிடவோ அல்லது வேறு எவ்விதமாகவும் உற்பத்தி செய்யவோ கூடாது.

இங்ஙனம்

எம்.ஜி. முஹம்மது ஹுஸைன் சாஹிபு

கலீஃபத்துல், ஷத்தாரி, சிஷ்தி, காதிரி,
சர்கலீபத்துர் ரிபாயீ.

எம்.ஹெச். ஹாஜா சம்சுதீன் சாஹிபு

நன்னூலகம்

ப.33, புது.59, கலிபா சாஹிபு தெரு,
நாகூர் - 611 002. நாகை மாவட்டம்,
தமிழ்நாடு. செல்: 094439 85250

Powered by CamScanner

இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி)

நாயகம் அவர்களின்

மகிமை

அரபு-அரபுத் தமிழ் மூலம்

ஆசிரியர்

ஜனாப் மௌலானா மௌலவி அல்ஹாஜ்

M.குலாம் தஸ்தகீர் நானா சாஹிபு ஆலிம்

(கலிஃபா, ஷத்தாரிய்யுல் காதிரி அவர்கள்)

ஜனாப்

M.G. முஹம்மது ஹுசைன் சாஹிபு

(கலீபா, ஷத்தாரிய்யுல் காதிரி ரிஃபாயீ)

விலை ரூ. 15.00

Powered by CamScanner

செய்யிதினா இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி) நாயகம் அவர்கள் ஹிஜ்ரி 85-ம் வருடம் ரபீயுல் அவ்வல் மாதம் பிறை - 13 திங்கட்கிழமை மதீனாவில் பிறந்தார்கள். ஹிஜ்ரி 148-ம் வருடம் ரஜப் மாதம் பிறை - 15 திங்கட்கிழமை வஃபாத்தாகி மதினா ஷரீஃபில் ஜன்னத்துல் பாக்கியாவில் அடக்கமானார்கள். அவர்களது திருப்பெயரால் அமைந்ததுதான் இப்புகழ் வாய்ந்த மகிமைப் பொருந்திய கஸீதாவாகும். இந்த கஸீதாவாகிறது என் தந்தையும், என் உஸ்தாதும், ஞான குருவும் ஆன மர்ஹூம் மௌலானா மௌலவி அல்ஹாஜ் மு.குலாம் தஸ்தகீர் நானா சாஹிபு, ஆலீம், (காதிரி-ஷத்தாரி) அவர்களால் இதற்குமுன் அரபியிலும், அரபுத் தமிழிலும், மொழி பெயர்ப்புசெய்து, அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அரபு, அரபுத் தமிழ் தெரியாத அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, இக் கஸீதாவையும் பொருளையும் தெளிவான தமிழில் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளேன். அத்துடன் நாயகம் அவர்களின் 11-திருநாமங்களான அஸ்மாவும் இத்துடன் இணைக்கப்பட்டு உள்ளது. இதையும் என் தந்தையால் பலமுறை அச்சிட்டு வெளிப்படுத்திய அரபி, அரபுத் தமிழ் மொழி பெயர்ப்பு, கிதாப், மனாபிவுல் ஹகாயிக் ஃபிதர் ஜூமதி கசாயிதி ஜாஃபர் சாதிக் (ரலி)என்னும் இந்த நூல் எனது தகப்பனார் அவர்களால் எனக்கு பதிப்புரிமைத்

தரப்பட்டிருப்பதால் வேறு யாரும் அச்சிடவும் வெளியிடவும் கூடாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கஸீதாவை யாபேர்களும் ஓதி, மேற்படி நாயகமவர்களின் கருணையையும், பரக்கத்தையும் அடையும் பொருட்டு எல்லாம் வல்ல அல்லாஹுத்த ஆலா நல்லுதவி புரிவானாக. ஆமீன்!

ஹாதிம் மு.கு. முஹம்மது ஹுசைன் சாஹிபு

எம்.ஹெச். ஹாஜா சம்சுதீன் சாஹிபு

Powered by CamScanner

ஓதுவதின் பலன்கள் !

இந்த கஸீதாவையும் இஸ்மு-11 திருநாமங்களையும் தினமும் அல்லது வெள்ளி, திங்கள் இரவுகளில் ஓதி வருவாராகில் நாயனுதவியால் நாடிய நாட்டங்கள் நிறைவேறும். இன்னும் திக்ரு, ராத்தீப், மௌலிது மஜ்லிஸ்களிலும் ஓதி வந்தால், இருதயம், தெளிவாகி இன்னல்களும் நீங்கும். இன்னும் ஷைத்தான், கபீது, ஜின் பிடித்தவர்கள் முன்னிலையில் ஓதினால் அவைகளின் உபத்திரவங்கள் நீங்கி கார்மானத்துடன் நல்சுகம் பெறும். குறிப்பாக ஆண்டு தோறும் ரஜப் மாதம் பிறை 22-ல் பூரியான் என்னும், இனிப்பு வகைகள் பரிசுத்தமான முறையில் செய்து, தனிப்பட்ட இடத்தை பரிசுத்தம் செய்து அந்த இடத்தில் நறுமணங்கமழும் அத்தர், பன்னீர், பூ வகையறாக்களும், சாம்பிராணி, அகர்கட்டை, பத்தி வகைகளை புகையிட்டு குறிப்பாக செய்யப்பட்ட பூரியான் என்னும் இனிப்பு வகையறாக்களை மண் பாத்திரத்தில் வைத்து இந்த கஸீதாவை முறைப்படி ஓதி (பஞ்சத்தன் பாக்) ஐவர்களான, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பாத்திமா நாயகி (ரலி), அலி (ரலி), இமாம்ஹஸன் (ரலி) இமாம்ஹுஸைன் (ரலி) ஆகிய இப்பரம ஐந்து

திருநாயகத் திருப்பெயராலும் ஹலரத் இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி) அவர்களின் திருப்பெயராலும் ஹதியா செய்து பாத்திஹா ஓதி சர்வ நாட்டங்களுக்கு "துஆ" கேட்டு தௌலத் செல் வீக சீமான் தனம் உண்டாகு நாட்டம் வைத்து "துஆ" கேட்டால் அப்படியே உண்டாகும் என்பதில் யாதொரு சந்தேகமும் கிடையாது.

ரஜப் பிறை 22-ம் தேதியில் மேற்படி பாத்திஹாவைச் செய்ய செய்யிதினா இமாம் ஜாஃபர் சாதிக் (ரலி) அவர்கள் விறகு வெட்டியார் மனைவிக்கு கட்டளையிட்டிருக்கிறார்கள். அக்கட்டளையின் பிரகாரம் விறகு வெட்டியார் மனைவி நடத்திய பாத்திஹாவின் பரக்கத்தின் பொருட்டால் வெளியூர் சென்று பொருள் கிடைக்காமல் கஷ்டத்துடன் அலைந்து திரிந்த அன்னவளின் கணவருக்கு திடீரென்று தெய்வாதீனமாக பொருள் கிடைத்து செல்வத்துடன் வந்து வீடு சேர்ந்து, மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

பலர் ரஜப் பிறை 22-ந் தேதியிலேயே நிறைவேற்றி நற்பலன் என்னும் வெற்றி பெற்றிருக்கின்றார்கள். நாமும் அந்தபடி செய்து நற்பலன் அடைய நாயன் நல்லுதவி புரிவானாகவும், ஆமீன்!

Powered by CamScanner

மனாபிவுல் ஹகாயிக்

பிஃபீதர்ஜ"மதி கஸாயிதி இமாம் ஜாஃபர் சாதிக்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

யாரப்(b)பு மலிகில் வா(f) பிக்
ஸல்லிலி (t)தாஹஸ் ஸாதிக்
மா(d) தாமம(d) துஹ"ஸ்ஷாஇிக
லிஇமாமி ஜஃ(f)பர்சா(d)திக்

Powered by CamScanner

ஹம்(d) தன் லில்லாஹில் ஹாலிக்
ரப்(b) பில் அனாமிர் ராஜிக்
உஹ்(d)தீ (b)பிம (d)துஹில்(F)பாயிக்
லிஇமாமி ஜஃ(f)பர் சா (d) திக்

பொருள்:-

சர்வ ஜீவன் மற்றும் ஆத்மாக்களை உற்பத்தி செய்து அவற்றின் இயல்புக்கு ஏற்ற நலம் புரிந்து, பாதுகாத்துக் கொண்டிருக்கிற வல்ல நாயனே! செய்யிதினா இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் புகழ் கவி பாட எனக்கு துணைபுரிந்துள்ள உனக்கே புகழ் அனைத்தும்! நீ பேரரசன். பெரும் கருணையாளன், அளவின்றி அள்ளித் தருகின்ற மகாகொடையாளன். அரங்குவதிலே இணையற்றவன், சர்வ வியாபகன்!

ஸல்லல் இலாஹுு ல் மன்னான்
அலன்ன(b) பிய்யில் (F)புர்க்கான்
வல் ஆலி ஊலில் இஹ்ஸான்
வ இமாமி ஜஃ(f) பர் சா(d)திக்

பொருள்:-

கருணை ரட்சகனான அல்லாஹ்வின் பேரருள் பொக்கிஷம் ஃபுர்க்கான் எனும் திருமறை. அந்த திவ்விய இறை மறைக்கு விளக்கமாய்த் திகழ்கிற நாயகம் (ஸல்-ம்) அவர்கள் மீதும், உதார குணத்தின் ஊற்றுக் கண்ணாய் இலங்கிய அன்னவர் குடும்பத்தார், கோத்திரத்தார் மீதும் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் மீதும் உண்மையுள்ள நாயன் ஸலவாத்தும் சலாமும். சொல்வானாக.

(d)தாஅஷ்ர(f)புல் ஹலாயிக்
(d)தாஅஃலமு ஹகாயிக்
(d)தா அ(f)ப்ஹமுத்(d)தகாயிக்
அஷ்ஷைஹுு ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

ஞானிகள், எஜமான், இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்கள் படைப்புகளிலே மகா சிறப்பு

வாய்ந்தவர்கள், பெருமை மிக்கவர்கள், கண்ணியம் பொருந்தியவர்கள், அந்தரங்கக் கல்விகளையும், மௌன, நுட்ப, முடல் முதலிய நுணுக்க ஞான ரகசியங்களையும் மிகவும் அறிந்தவர்கள்.

ஷம்சுல் உலல் முனவ்வர்
(b)ப(d)துருத் (d)துஜல் முகம்மர்
நூரல் ஹுூ (d)தல்முஃ(f)பஹ்ஹர்
அஃனீ(b)பிஜஃ(f)பர் சா(d) திக்

பொருள்:-

இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்களது தோற்றம் காலைக்கதிரவனைப் போல் என்றும் ஜொலித்துக் கொண்டிருக்கும், இருண்ட இரவிலே தண்ணொளி எய்துவரும் பூரண நிலவு போன்ற அவர்களது சுந்தர வதனத்தை எவருக்குப் பார்க்கத்தெவிட்டும்? நேர்வழிக்கு வேண்டிய சன்மார்க்கப் பிடிப்புகளை மனமுவந்து அருளக்கூடிய அவர்களது அண்மையைப் பெற எவருக்குத்தான் விருப்பம் இருக்காது?

ஹுஸ்னுல் அனாமி ஹுலுகா
ஸி(d)துகுல் கலாமி உஸ்கா
(b)புர்வுஸ் ஸகாமி ஹக்கா,
அஃலிம்(b)பி ஜஃ(f)பர் சா(d) திக்

பொருள்:-

இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்கள், மனிதர்களிலே ஒரு நற்குணச் சீமான். ஒரு கவிஞனின் மொழியறிவும், பிரசங்கியின் சொல்லாற்றலும் பெற்றிருந்த அவர்களது நாவிலே என்றும் உண்மைதான் நடமாடிக்கொண்டிருக்கும். உலக மக்களிடத்திலே எக்காலத்திலும் அவர்கள் எதையும் எதிர்பார்த்தது கிடையாது. இறைவன் உதவியை கொண்டே மிக எளிய ஜீவனம் நடத்திவந்தார்கள். யாசித்து வருவோருக்கு இருப்பதை அப்படியே ஈந்து விடுவார்கள். இத்தகைய பெருங்குண தனவந்தரைப் பற்றித் தெளிவாய் விளக்க எந்த மொழியில் வார்த்தை தேடுவேன்?

(d)தா லர்லமும் கரீமும்
(d)தா சில்(d)திமும் அலீமும்
(d)தா லர்(g)ஙமும் ஜஸீமும்
அஹ்சின்(b)பி ஜஃ(f)பர் சா (d)திக்

பொருள்:-

ரணகளம், செல்லாமலே, போர் புரியாமலே எதிரிகளை வென்றுவிடக் கூடிய மாவீரர்களையும், வேங்கைப் போல் பதுங்கியிருந்து வஞ்சகமாய்த் தாக்கக் கூடிய மார்க்க விரோதிகளையும், சமர்க்களத்தில் சிங்கமாய்க் கர்ஜித்து வெற்றி முழக்கம் செய்கிற வீரர்களையும், தமது புகழ் வாய்ந்த புன்னகையால் வெற்றி கொண்டுவிடும் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் தனிச்சிறப்பை என்னவென்று சொல்வேன் ?

சம்சாமுனல் மு(f)பஸ்ஸல்
கம்காமுனல் முகம்மல்
(t)தம் (t)தாமுனல் மு(b)பத் (d)தல்
அக்ரிம்(b)பிஜஃ(f)பர் சா(d) திக்

பொருள் :-

அவர்கள் எழிற்குணம் குடிகொண்ட ஏந்தல் நாயகம், நிறைவுக்கு உதாரணமாய் திகழ்கிற தத்துவ

நாயகம், வஞ்சிக்கப்பட்ட கடையருக்கும் கைகொடுக்கும் நீதி நாயகம் இவ்வித புகழ் கொடி தாங்கி நிற்கும் கண்ணியமிக்க இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் உதார குணம் பற்றி என்ன கூறுவேன்?

(t)தாஜுஷ்ஷுயூஹில் அம்ஜ (d)து
(b) பாஜுல்குலூ (b) பில் அஹ்ம(d)து
கன்ஜுல் உலூமில் அர்ஷ(d)து
அஃலிம்(b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

அவர்கள் திருத்தன்மைகள் நிறைந்த மஹான்களில் மலை போன்றவர்கள். நேர்வழி காட்டும் ஒளி விளக்கான குருமார்களின் கிரீடம் போன்றவர்கள். பறவைகளில் ராஜாளி போல குத்புமார்களில் கணம் தங்கியவர்கள். மெஞ்ஞானக் கல்வியிலே புதையல் போன்ற வேந்தநாதர் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் அருள் நிறைபற்றி என்ன உரைப்பேன்?

நஜ்லுல் இமாமில் அக்(b)பர்
செய்யி(d)து முஹம்ம (d)து(b)பாக்கர்
குவ்வத்(t)து(t)தாஹல் அன்வர்
அஹ்ஸின்(b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

மகா கண்ணியமும், சிறப்பும் கொண்ட செய்ய தினா செய்யிது முகம்மது பாக்கர் நாயகம் அவர்களின் அருந்தவப் புதல்வர் உலகு ஜோதியான இறைகொடை தாஹா நபி முஹம்மது (ஸல்) அவர்களின் அன்புப் பேரர், இத்தகைய பேறு பெற்ற இமாம் ஜாஃபர் சாதிக் எஜமானின் வனப்புப்பற்றி எப்படி நவில்வேன்?

மின் சுல்(b)பிஅச(d)தில்(g)காலி(b)பு
ஹைஹ(d)தர் அலியில் வாஹி(b)பு
ஹி(f)ப்(d)துல் ஹுசைனிர் ராகி(b)பு
அக்ரிம்(b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

யுத்த களத்தில் சிங்கமாய்க் கர்ஜித்து ஜெய நிலையை உறுதிபடுத்துகிற மாவீரர் இமாம் ஹைதர்

Powered by CamScanner

அலி (ரலி) அவர்களின் ஆண் சந்ததியில் உதித்தவர்கள். அல்லாஹ்விலே இல்லாமலாகி தன் ஆன்மாவை அவனுக்கு அர்ப்பணிக்கிறதிலே பெருமையுண்டு. வீரச் சொர்க்கப் பதவியைப் பெற்றுக்கொண்ட செய்யிதினா செய்யிது இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களின் கண்ணிய மரபிலே தோன்றியவர்கள். இத்தன்மை இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் பாரம்பரிய மேன்மையைப் பற்றி மேலும் என்ன விளக்குவேன்?

ழூ(f)பீலிவஃ(d)தின் கர்மா
முஹ்யின்லி(d)தீனின் கியாமா
முஃ(t)தில் ஜவா(d)தி கித்மா
அஃலிம்(b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

சன்மார்க்கத்தின் உயிர்ப்பகுதி வாக்குறுதியை கண்ணியத்துடன் நிறைவேற்றுவதில் இருக்கிறது என்பதை உணர்த்திய எஜமான், அல்லாஹ்வுக்காகக் கொடை கொடுப்பவர்கள் ரகசியமாய் கொடுக்கட்டும் என்பதைச் சொல்லாலும், செயலாலும் புரியவைத்த காருண்ய எஜமான் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் மதி விலாசத்தை எங்ஙனம் சித்தரிக்க முடியும்?

அவ்லல் அனாமி நுக(b)பா
அஜ்லல் கிராமி நஸ(b)பா
அஃலல் மகாமி ருத(b)பா
அக்ரிம்(b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

உலகில் மனிதர்களை பாதுகாப்பவர்களிலே மகா மேலானவர்கள். தேவையுள்ளோருக்கு கொடுப்பவர்களிலே மிகச் சிறந்தவர்கள். ஏழைகளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டு கண்ணீரை துடைப்பவர்களில் மிகவும் பொறுப்பானவர்கள். கீர்த்தி பெற்ற வமிசங்களில் முடிபோன்ற வமிசத்தில் தோன்றியவர்கள். ஆத்ம பதவி உயர்வு பெற்றவர்களிலே கண்ணிய ஸ்தானம் அடைந்தவர்கள். இவ்வித வர்ணிப்புக் கொண்ட இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் தத்துவம் பற்றி என்ன சொல்வேன்?

(t)தவ்வாஉ அம்ரிர் ரஹ்மான்
த(t)ப்(f)பாஉ ஷர்ரு ஷைத்(t)தான்
வஃஆலு ஜம்ஈல் இன்ஸான்
அஹ்ஸின்(b)பிஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

ஒப்பற்ற அருளாளனும், நிகரற்ற கொடையாளனுமான அல்லாஹ்வின் கட்டளைக்கு வழிபட்டு நற்றவம்

புரிகிறவர்கள்; கெட்ட சம்பவம் மற்றும் பேய் பிசாசு முதலிய துஷ்ட அரூப அபாயங்களில் நின்றும் மனிதர்களை பாதுகாப்பவர்கள்; இஸ்லாமிய மானுடர் மற்றும் ஜின்களுக்கு நல்லுபதேசம் புரிகிறவர்கள்; அல்லாஹ்வின் நேரிய பாதையைத் தெளிவாய்க் காண்பிக்கிறவர்கள். இப்படிப்பட்ட கருணை நாயகம் இமாம் ஜாஃபர் சாதிக் எஜமானின் சக்தி பற்றி என்ன பகர்வேன் ?

லா(d)துஹ்ரத சிவல்லாஹ்
லா(d)திக்ரஹூ இல்லல்லாஹ்
லா ஷவ்கஹூ (g)ைரல்லாஹ்
அஃலிம் (b)பிஜஃ (f)பர்சா (b)திக்

பொருள்:-

அவர்களது சிரமமும், கஷ்டமும் அல்லாஹ்வுக்காகவே இருக்கும். அவர்களது பிரியமும், பாசமும் அந்த வல்ல நாயகனின் திருப்திக்காகவே இருக்கும். இப்படிப்பட்ட செயல் அனைத்தும் அல்லாஹ்வைக் கொண்டே என நம்பி காரிய மாற்றுகிற இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் மகிமைப் பற்றி எவ்விதம் விண்டுரைப்பேன் ?

(t)தூளல்லயாலீ காயிம்
சவ்மன்னஹாரி ஸாயிம்
(d)திக்ரல் ஹ(f)பிய்யி(d)தாயிம்
அஹ்ஸின்(b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

இராக்காலங்களில் இறைவனை அஞ்சிய நிலையில் நின்று கடுந்தவம் புரிகிறவர்கள். பகல் நேரங்களில் நோன்பு நோற்கிறவர்கள். திக்றுஹஃபி என்னும் ரகசிய திக்றை நியமமாய் செய்கிறவர்கள். இதற்கு நாயக ராஜர் இமாம் ஜாஃபர் சாதிக் எஜமான் தகுதி பற்றி என்ன மாதிரி பாட முயல்வேன்!

மா(d)தா(d)தஆ இலல்லாஹ்
க(d)துனாலஹுூ மினல்லாஹ்
இ(b)த்ராமஹுூல (d)தல்லாஹ்
அக்ரிம் (b)பிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

தான் நாடியதை, நாடிய கணத்தில் ரட்சகனான ரப்புவின் புறத்தின்றும் பெற்றுக் கொள்ளக்கூடியவர்கள்.

Powered by CamScanner

அப்படிப் பெற்றுக்கொண்ட அல்லாஹ்வின் தனி அருளைத்தான் அனுபவிப்பதோடு தன் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் இல்லாத ஏழை எளியோருக்கும் அனுபவிக்க உதவுவார்கள். இவ்விதம் தனக்கு மட்டுமே என்று எதையுமே நாடாத இமாம் நாயகம் அவர்களால் நன்மை பெற்றோர் அநேகர் உண்டு. இமாம் கைஸ் (ரலி) என்பவரின் மகனார் லைது என்பவர் சொல்கிறார்: "ஹஜ்ஜு" செய்வதற்காக மக்கா சென்றிருந்த நான் ஒரு நாள் குபைகு என்கிற மலையில் தங்கி இருந்தேன். அசர்; பிற்பகல் தொழுகை நேரம் இரக்கமான ஒரு சப்தம் கேட்டது, ஒலி வந்த திசையை நோக்கிச் சென்றேன். தொழுது முடிந்த நிலையில் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அல்லாஹ்விடம் கைஏந்திப் பிரார்த்தித்துக் கொண்டிருக்க கண்டேன். கருணை மிகுந்த நாயனே; நான் உனக்காக நோன்பு வைத்து இருக்கிறேன். ஆனால் நோன்பு திறப்பதற்கு என்னிடம் உணவு கிடையாது. என் ஆடைகளும் கிழிந்து இருக்கின்றன. எனவே நோன்பு திறப்பதற்காக திராட்சைப் பழமும் இரண்டு மாற்றுடைகளும் தந்தருள் !என அவர்கள் வேண்ட,நான் ஆமீன் கூறினேன். திடீரென்று வானத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. கண்கள் கூச கண்களை பொத்திக்கொண்டேன். பின்னர் விழி திறந்து பார்த்தபோது நாயகம் அவர்களின் பொற்கரத்தில் மேலான திராட்சைக் குலைகளும் உயர்ந்த ஆடைகளும், இருக்கக் கண்டேன். அது

திராட்சைகள் பழுக்கக் கூடிய காலம் அல்ல. எனவே இறைவனை தவிர்த்து,; அந்த பழங்களை அவர்களுக்கு வேறு யாரும் அளித்திருக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்டேன். அந்த சொர்க்கத்துக் கனிகளை உண்டு நலம் பெற எனக்கு ஆசை, ஆண்டவர்களை நெருங்குகிறேன். எஜமானே!தாங்கள் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தபோது நான் ஆமீன் கூறினேன். ஆகவே எனக்கு கொஞ்சம் பழமும், உடைகளில் ஒன்றும் தாருங்கள் என்று வினயமாய் வேண்டினேன். அவர்கள் சிரித்துக்கொண்டே நான் கேட்டவற்றை தந்தார்கள். அந்த அருட் பொருட்களைக் கொண்டு என் ஜீவிதம் உன்னதம் பெற்று விட்டது. இவ்வித பாக்கியம் பெற்ற நாதாவான இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் சிறப்புப்பற்றி என்ன பேசுவேன்?

(k)கம் (k)கம்மினல் கராமாதி
தஹரத்(b)பிஹிஅலாமாத்
லி(g)னியா(d)தினா சலாமாத்
(b)பிஷ்ஷைகி ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

தம்மை ஈடேற்றி அல்லாஹ்வின் ரட்சிப்பை பெறும் ரப்புவாக இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்கள்

எத்தனை எத்தனையோ புதுமையான கராமாத்துகளை புரிந்துள்ளார்கள். நல்லோர்க்கு ஓர் அடையாளமாய் வெளிப்படிருந்த அவர்களது செயல்கள் வழி காட்டலுக்கு ஓர் உதாரணமாய் இருந்திருக்கின்றன.

இத்(d)மா ஷகத்ஹு உ(d)த்மா
ஜவ்ஜ(t)து மன்(g)னா(b)பந(d)த்மா
ஹுப்(b)பீ(b)பில்ஆலி கர்மா
க(d)துகால ஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

திருமதினா நகரில் ஓர் ஏழை விறகு வெட்டி அவனுக்கு மனைவி மக்கள் உண்டு. பெரிய குடும்பம். அதை காப்பாற்றுகிற பொறுப்பு அவனிடமே இருந்ததால் கடுமையாய் உழைக்க வேண்டியிருந்தது. அதிகாலையில் வெறும் வயிற்றுடன் கோடாரியைத் தோளில் போட்டுக் கொண்டு காட்டுப் பக்கம் செல்கிற அவன் காய்ந்த மரங்களைத் தேடி மண்டை வெடிக்கிற பாலைவனத்து வெயிலில் அலைந்து திரிவான். அத்தகைய மரம் தென்பட்டு, அதை உடைத்து முடிக்க மாலையாகி விடும். காலையில் பட்டினி, பகலிலும்

பட்டினி அந்த நிலையில் தகிக்கும் வெயிலில் விறகு பிளந்த களைப்பு வேறு; கடைசியாய் தாகத்தால் நாவரள விறகு சுமையை தலையில் வைத்து மதினத்து வீதிகளில் விறகு வாங்கலையோ, விறகு எனக் கூறிக் கொண்டு அலைவான். அப்புறம் அதை விற்று! சொற்பக் காசுடன் கடைத்தெரு சென்று சமையலுக்கு வேண்டிய சாமான்கள் வாங்கிக் கொண்டு வீடு திரும்புவான். பட்டினி களைப்புடன் படுத்திருக்கும் மனைவி, மக்களுக்கு அதற்கு மேல்தான் உடம்பிலே உணர்வு. இப்படி வெகு நாள் வாழ்ந்து கசந்து போன அவன் வெளியூர் சென்று உழைத்தாலாவது நல்ல காலம் பிறக்கலாம் என்ற எண்ணத்துடன் மனைவி, மக்களிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டு நெடுந்தொலைவிலுள்ள வேற்றூர் சென்று விட்டான். ஆனால் பிரயோஜனம்? அங்கேயும் அதே நிலைதான். எத்தனை கடின முயற்சிகள் செய்தும் அவனுக்கு நல்வாழ்க்கை உண்டாகவே இல்லை. அதனால் வெறுப்புற்று வேலை வெட்டிக்குப் போகாமல் சோம்பிக்கிடக்க ஆரம்பித்து விட்டான். இப்படியே பனிரெண்டு ஆண்டு காலம் ஓடிவிட்டது. இதற்கிடையில் அவன் ஊருக்கு எந்த செய்தியும் அனுப்பவில்லை. பணம் அனுப்ப வழியில்லை. ஊரிலேயே அக்கம் பக்கத்து வீடுகளில் வேலை செய்து தன் பிள்ளை குட்டிகளை காப்பாற்றி வந்த அவன் மனைவி தன் கணவன் வசதியுடன் திரும்பி வருவான் என நீண்ட நாள், எதிர்பார்த்து ஏமாந்ததை நினைத்து மிகவும் வருந்தினாள். பசி மயக்கத்துடன் நடக்க முடியாது, தள்ளாடும்

குழந்தைகளை அள்ளி மடியில் போட்டுக்கொண்டு, மக்களே நம் நிலை இப்படி ஆகிவிட்டதே நான் என்ன செய்வேன் என்று கண்ணீர் உகுப்பாள். மனத்தை உருக்கும் சோகத் தாலாட்டுக்களைப்பாடி மக்களை தூங்க வைக்க முயல்வாள். அன்றொரு நாள் அந்த பெண்மணி வழக்கப்படி தாலாட்டுப்பாடி குழந்தைகளை உறங்க வைத்து கொண்டிருக்கையில் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் தன் சீடர்களுடன் அவ்வழியாய் வருவதை கண்ணுற்றாள். உடனே எழுந்தாள். கிழிந்திருந்த ஆடைகளின் துவாரத்தை கையால் மறைத்துக்கொண்டு ஆண்டவர்களை நோக்கி ஓடினாள். அவளது வறுமைக் கோலத்தைக் கண்டு மனம் இளகிய கருணை மிகுந்த நாயகம்: என்னம்மா வேண்டும் என வினவ, அவள் தன் குறைகளை கூறத் தொடங்கினாள். "எஜமானே! நாங்கள் மிகவும் ஏழைகள், அனாதைகள் வறுமையின் கொடுமை தாளாது என் கணவர் வெளியூர் சென்றார். நெடுங்காலமாகியும் அவர் திரும்பி வரவில்லை. அதனால் எங்கள் துயரங்கள் இரட்டிப்பாகி விட்டன.நாயகமே செல்வந்தர்கள் எங்களை விரட்டுகிறார்கள். செல்வாக்குள்ள சீமான்கள் எங்களை பார்க்கவே கூசுகிறார்கள், அதிகாரிகளும், வியாபாரிகளும், எங்கள் வறுமைக் கோலத்தைக் கண்டு கூச்சப்பட்டு ஒதுங்கி போகிறார்கள். இந்நிலையில் அல்லாஹ்வின் அதிகாரியான

தங்களைத் தவிர என் போன்றவர்களுக்கு உதவுவார்கள் யார்? ஞான சீமானான தங்களைத் தவிர எங்கள் குரலை கருணையுடன் செவிமடுப்பவர் எவர்? இமாம் நாயகமே இப்போதே எனக்கு உதவுங்கள். மிகுந்த செல்வத்துடன் என் கணவர் ஊர் திரும்ப அருள் புரியுங்கள்!" என கண்ணீர் வடித்து முறையிட்டாள். அவள் வேண்டுகோளைக் கவனமாய் கேட்டு மனம் கசிந்து தமது ஞான திருஷ்டியால் நடப்பின் அந்தரங்கத்தை தெரிந்துச் சொன்னார்கள், "நல்லது பெண்ணே" நான் சொல்வதை கவனமாய் கேட்டுக்கொள். ஒவ்வொரு ஆண்டும் ரஜப் மாதம் 22ம் நாள் பூரியான் என்ற பலகாரமோ அல்லது அது போன்ற இனிப்பான வேறு பலகாரமோ சுத்தமாகவும், சுவையாகவும் செய்து அதை இரண்டு மண் பாண்டத்தில் வைத்து துப்புறவு செய்யப்பட்ட தன் வீட்டின் ஓரிடத்தில் அவற்றை வைக்க வேண்டும். சாம்புராணி, ஊதுபத்தி, சந்தன அகிற் கட்டைகள் கொண்டு தூய புகை உண்டாக்க வேண்டும். பின்னர் சுத்தமான உடலுடன், உள்ளத்துடன் அங்கே நின்று பஞ்சத்தன்பாக் என்கிற பரம திருநாயகங்களான எனது பாட்டனார் முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்-ம்) அவர்கள், ஹலரத் அலி (ரலி), அவர்கள், செய்யிதத்து பாத்திமா நாயகி (ரலி) ஹலரத் இமாம் ஹஸன் (ரலி) ஹலரத் இமாம் ஹுசைன் (ரலி) ஆகியோர்களுடன் எனது பேரையும் சேர்த்து பாத்திஹா ஓதி

சலவாத்துடன் முடித்து துஆ கேட்டால் தான் நாடியதை பெற்றுக்கொள்ளலாம். இம்முறையை எவர் அனுசரித்தாலும் நாட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். நிறைந்த பொருள்களும் செல்வாக்கும் உண்டாகும். இயலாமை, வறுமை நீங்கும். மனிதர்களிடம் மதிப்பு உயரும். புதையல் கிடைக்கும். தூரதேசம் சென்ற கணவன் நலத்துடன் திரும்பி வருவான். அப்படி நான் சொல்கிறபடி நடக்காவிட்டால் கியாமத் நாளில் இறுதி தீர்ப்பு தினத்தில் என் சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு நாயன் சமூகத்திற்கு செல்லுங்கள். இறைவா! இமாம்ஜாஃபர் பொய் சொல்லி விட்டார்! என்று அவமானப் படுத்துங்கள் என்றார்கள்.

வ(k)க(d)தத்தரீ(d)த சனஅ(t)த்
ஸ(d)ப்அல் ம(d)தானி கரஅ(t)த்
அஹ்லல் அ(b)பாஇ கஸ(d)த(t)த்
கஅம்ரிஜஃ(f)பர்சா(b)திக்

பொருள்:-

ஹலரத் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் சொன்ன அந்த விசேஷத்தை விறகு வெட்டியின் மனைவி திடமாய் நம்பினாள். அந்த வருஷமே ரஜப் மாதம் இருபத்தி இரண்டாம் நாள் எளிமையான முறையில் பூரியான் முதலியவற்றைச் செய்து பாத்திஹா ஓதி துஆ கேட்டாள். என்ன ஆச்சரியம் அவள் துஆ

இறைஞ்சிக் கொண்டிருந்த அதே நேரத்தில்...... காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த அவள் கணவன் திடீரென்று சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான். வெட்டுண்டு சாய்ந்த மரத்தின் அடியிலிருந்து தங்க காசுகள் நிரம்பிய வெண்கல குடமொன்று புதையலாய்ப் புறப்படுவதைக் கண்டு திகைத்தான். சில நாட்களில் செல்வந்தனாக ஊர் திரும்பிய தன் கணவனைக் கட்டிக்கொண்டு விறகு வெட்டியின் மனைவி ஆனந்தக் கண்ணீர் சொறிந்தாள். உலகமே கருகிவிட்டாலும் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் போன்ற பெரியார்களின் வாக்கு கருகாது என்பதற்கு இந்த வரலாற்றுத் துணுக்கு ஓர் உதாரணமன்றோ!

ஃ(f) பஜ்ஜவ் ஜுனால (d)திக்ரா
ரஜ(b)பன்(t)தலும்மு ஹிர்ஜா
ஃபீஹிஜி யா (d)துன் ருமிஜா
(b)பிஜாஹி ஜஃபர் சாதிக்

பொருள்:-

சகல சௌபாக்கியப் பூரிப்புடன் வந்து சேர்ந்த விறகு வெட்டி தன் மனைவியிடம் தான் வெளியூரில் பட்ட சிரமங்களையும், கஷ்ட நஷ்டங்களையும் ஒரு நாள்

சொல்ல "அந்த சந்தோஷத்தை நமக்கு தந்தவர்கள் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகமே"என்றால் அவள், பின்னர் அவன் ஊரில் இல்லாத போது தான் பட்ட வறுமைப் பாட்டையும், இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்திடம் ஒரு நாள் முறையிட்டுக் கொண்டதையும், வறுமை நீங்கி சுபீட்சம் உண்டாக அவர்கள் காண்பித்த வழியையும் விரிவாய் சொன்ன அவள், அவர்கள் கூறிய பிரகாரம் தான் நடந்து கொண்டதால் தான் இறைவன் தங்களுக்கு இந்த செல்வத்தை தந்தான். எனவே நாம் என்றும் வளப்பத்துடன் வாழ வேண்டி வருடந்தோறும் இந்த பாத்திஹாவை நாம் செய்து வரவேண்டும் என்றாள். அதற்கு அவனும் ஒப்புக்கொண்டான்.

வர(d)தல் வஜீர ஹ(d)த(d)தான்
(b)பிஉஜூதில் அஹ்லி லவ்மான்
க(d)துஃ(f)பாஜ(b)பஃதல் அ(f)ப்
(b)பிஅமானி ஜஃ(f)பர்சா (d)திக்

பொருள்:-

விறகு வெட்டி வெளியூர் சென்றிருந்த போது வயிற்றுப் பாட்டுக்காக வீட்டு வேலைகள் செய்து வந்த அவன் மனைவி அவ்வூர் மந்திரியின் மனைவி இடத்தும் வேலை பார்த்திருக்கிறாள்.

கடந்த சிறிது காலமாக அவள் வேலைக்கு வராதது பற்றி மந்திரி மனைவிக்கு ஆச்சரியம். தன் பணிப் பெண்ணிடம் விசாரித்தாள். அவள் இனி வேலைக்கு வர மாட்டாள் அம்மா. இப்போது அவள் வீட்டுக்குப் பல வேலைக்காரிகள் தேவைப்படுகிறது என்றாள். என்னடியம்மா அப்படி அவளுக்கு வாழ்வு வந்து விட்டது? என்றாள் இலக்காரமாக மந்திரியின் மனைவி. பணிப்பெண் தான் கேள்விப்பட்ட சேதியைச் சொல்ல, வியப்புடன் வாய் பிளந்த மந்திரி மனைவி: அப்படியா சேதி!நீ போய் அவளை உடனே இங்கே கூட்டிவா என கட்டளையிட்டாள். பணிப்பெண்ணுடன் அங்கே வந்த விறகு வெட்டியின் மனைவி; கூப்பிட்டீங்களா அம்மா! எனப் பணிவுடன் கேட்க, "ஆமாண்டி! உனக்கு ஏதோ பெரிசா வசதி ஏற்பட்டு விட்டதாமே?எங்கிருந்தடி அவ்வளவும் கிடைத்தது?" என வினவ, விறகு வெட்டியின் மனைவி ஆதியோடந்தமாக நடப்பு அத்தனையும் விவரித்தாள்.

அதைக் கேட்டதும் மந்திரி மனைவி முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடித்தன. உள்ளத்துப் பொறாமைத் தீயால் அவள் முகம் விகாரமாயிற்று. "என்னடி கரடி விடுகிறாய்? இமாம் ஜாஃபர் சாதிக்கை எனக்குத் தெரியாதா? அவர் ஒரு பரதேசி. அவர் சொன்னதும் உனக்கு பலித்து விட்டதோ? அடியே: மரியாதையா உண்மையை சொல்விடு. வெளியூர் சென்றிருந்த

உன் புருஷன் யாரையோ மோசம் செய்து, கொள்ளை பொருளுடன் வந்திருக்கிறான். அதை மறைப்பதற்காக நீ ஏதோ கதை விடுகிறாய்." எனக் கத்தி ஆர்ப்பரித்துக் கேவலமா பேசவும், விறகு வெட்டி மனைவி தன்னிலை மறந்தாள்: நாவை அடக்கி பேசுங்கள் அம்மா! இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தை கேவலமாய் தூஷணித்ததற்காக கூடிய சீக்கிரம் கண்டு கொள்வீர்கள்! எனக் குமுறிவிட்டு வீடு திரும்பினாள்.

சில நாட்களில் அந்த மந்திரி குடும்பத்தை ஒரு பேரபாய மேகம் சூழத் துவங்கிற்று. 'அந்த மந்திரி மேல் அரசருக்கு ரொம்பப் பிரியம். நம்பிக்கை. ஆனால் கடந்த கொஞ்ச நாட்களாக அரசர் அவரைச் சந்தேகிக்கத் தொடங்கியிருந்தார். அந்த மந்திரியால் நாட்டுக்குப் பல தொல்லை உண்டாகியிருக்கிறது என்று எந்த எந்த பொறாமைக்காரர்கள் கூறியவற்றையெல்லாம் ஒப்புக் கொள்ள ஆரம்பித்தார். திடீரென்று ஒரு நாள் மந்திரியையும் அவர் மனைவியையும் பிடித்து சிறையில் தள்ளும்படி கட்டளை பிறப்பித்து விட்டார்.

திடீரென்று தங்கள் வாழ்வு பறிபோய் சிறைக்கு வந்துவிட்டதை எண்ணி அவர்கள் வருந்திக் கொண்டிருக்கையில் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தைப் பற்றி தான் தூஷனிப்பாய் பேசியதை தெரிவித்த மந்திரி

மனைவி ஏங்க இந்த கஷ்டத்துக்கெல்லாம் அதுதான் காரணமாக இருக்குமோ? என்றாள்.

திடுக்கிட்ட மந்திரி, அடிப்பாவி, அந்த மகானையா பேசினாய்? நமக்கு சம்பவித்துள்ள துன்பத்திற்கு காரணமே அதுதான். அவர்களை தூஷணித்த குற்றத்தை மன்னிக்கும்படி அல்லாஹ்விடம் மன்னிப்புக் கோருவோம் என்று இருவரும் மனமுருக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். அடுத்த சில தினங்களில் அரசனிடமிருந்து அவர்களுக்கு விடுதலை உத்தரவு வந்தது. மந்திரிக்கு வேலையும் கிடைத்தது. அவர் மீது சந்தேகப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய் என்பதை தாம் தெரிந்து கொண்டதாக அரசன் மந்திரிக்கு சமாதானம் கூறினார்.

(d)தாக ஷஹி (d)தல் அஸ்அ(d)த
ரஜ(b)பன்(b)பிஹைய்யில் அ(b)ப்ஜ(d)த்
ஃ(f)பீ ஆமியும்னில் அஜ்ஹ (d)து
அஷ்ஷைஹு ஜஃபர்சா (d)திக்

பொருள்:-

இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்கள், 'ஹக்' கிலே அடங்காத காதல் கொண்டவர்கள். தன் ஆன்மாவை அல்லாஹ்வின் அளவிலே அர்ப்பணித்து

வாழ்ந்து பழகிய அந்த பெருமகனார் 148-ம் வருஷம் ரஜப் மாதம் ஷஹீது பதவியை அடைந்து இறையடி சேர்ந்தார்கள். அவர்களது அழிவற்ற பூதவுடல் மதீனா மாநகரிலே ஜன்னத்துல் பகீயா என்ற இடத்திலே நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

யாரப்(b)பனா ரஹிமா
(f)ஃப(g)ங்(f)ஃபிர்லனா(d)தவாமா
அஸ்இ(d)த்லனா ஹிதாமா
(b)பிஜாஹிஜஃ(f)பர்சா(d)திக்

பொருள்:-

எங்களுக்கு நல்லுதவி புரிந்து ரட்சிக்கிற எங்கள் நாயகனே, செய்யிதினா இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் பொருட்டால் எங்கள் பாவங்கள் அனைத்தையும் பொறுத்து மன்னிப்பாயாக, எங்கள் ஜீவிய காலமுடிவிலே கலிமாவுடன் எங்களை கரை சேர்ப்பாயாக, மறுமையிலே நல்லோர் கூட்டத்துடன் எங்களை எழுப்பி அருள்வாயாக!

வர்ஜுக்லஹுல்வஸீலத
வத்(d)தரஜ(t)துல்ஃ(f)பளீலா
வஷ்ஷர்ஃ(f)பதல் ஜமீலா
லிஇமாமி ஜஃ(f) பர் சா(d)திக்

பொருள்:-

இறைவா இன்னும் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்களுக்கு எங்களுக்காக உன்னிடம் மன்றாடும் உயரிய பதவியையும் மகிமையும் தந்தருள். எங்கள் உயர்வுக்கு அவர்கள் ஊன்றுகோலாக இருக்க உதவி செய்!

வரல்லியன்ஹு ரல்யா
அஸ்கின்ஹு(d)தார உல்யா
லுக்யாக்க ஆத்தி ச(f)ப்யா
லிஇமாமி ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

நாயகனே இன்னும் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்களுக்கு துலங்கி இலங்கும் உனது கண்ணியப்பெருமை மிக்க லிகா என்னும் திருச்சந்திப்பு பாக்கியத்தைக் கொடுத்து கிருபை செய் ஜன்னத் என்னும் உயரிய சுவனத்தில் அவர்களுக்கு இடமளித்து அருள

உனது அருங்கருணை முகங்கொண்டு அவர்களை பொருந்திக் கொள்வாயாக; ஆமீன்

ஃ(f)பங் (f)பிர் (d)துனூ (b)ப நானா
சாஹி(b)ப் அயாரஹ் மானா
வர்ஜுக்லஹு இர்ஃ(f)பானா
(b)பிஜா ஹிஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

அஞ்ஞான இருள் அகற்றி மெய்ஞ்ஞானக்கதிர் அருளும் நிறைஞான நாயனே, செய்யிது இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்களின் கண்ணிய மகிமை கொண்டு இந்தச் சிறப்புறு நூலை தயாரித்த நானா சாஹிப் என்பவரின் பிழைகளைப் பொறுத்தருள்வாயாக! உன்னை அறிந்து தரிசிக்கும் அந்தரங்க ஞானப்பாக்கியத்தை தந்தருள்வாயாக!

அஜ்கஸ்ஸலாத்தில் அஜ்ஸம்
அலர்ரஊ(f)ஃபில் அக்ரம்
வல்ஆலி ஹிஜ் (b)பில் (f)அஃலம்
வஇமாமி ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

மகா கனமும், சிறப்பும் கொண்ட சலவாத்தாகிறது. கண்ணிய, கொடை, இரக்க குணங்கள் நிரம்பிய எங்கள் பெருமான் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் மீதும் அன்னவர் கிளையார், கோத்திரத்தார் மீதும் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் மீதும் உண்டாவதாக.

இந்த பைத்து செய்யிதினா இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்களிடம், அவர்களின் கிருபை, ரஹ்மத்தை நாடி ஓதும் பைத்து. இதை ராத்தீபு, மவுலூது மஜ்லீஸில் சுற்றி உள்ளவர்கள் ஓதவும்;

ரலியல்லாஹுு அன்ஹுுல் ஹாலிக்
ரலியல்லாஹுு அன்ஹுுர் ராஜிக்
ரலியல்லாஹுு அன்ஹுுல் ஹாலிக்
மவுலானா ஜஃ(f)பர் சா(d)திக்

கஸீதத்து ஃதானி

பாஇமாமு குல்லிஃ(f)பாயிக்
பாஇமாமு குல்லி வா(d)திக்
அன்க்குமு ரிலாவுல் ஹாலிக்
மவுலானா ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

தவம் புரிந்து உயர் பதவி பெற்றவர்களுக்கு முன்னிலையானவர்களே, விசுவாசம் உள்ள மகான்களில் முக்கியம் மிக்க தலைவரானவர்களே, எங்கள் இமாம் ஜாஃபர் சாதிக் நாயகமே, தங்கள் பொருட்டால் வல்ல நாயனின் கிருபை, எங்கள் மீது உண்டாவதாக.

யானஜீலல்(b)பா க்கரிய்யி
நூரஜனல்: அலிய்யி
ஆத்தினா கல்(b)பஸ்ஸஃ(f)பிய்யி
ஷைஹனா ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

செய்யிது முஹம்மது பாக்கர் நாயகம் அவர்களது அருந்தவப் புதல்வரே அல்லாஹ்வின் அர்ஷ் 'புலி' அலி (ரலி) அவர்களின் கண்ணியமான வாழ்வே, எங்களது வழிகாட்டியான ஷெய்கு இமாம் ஜாஃபர் சாதிக்

நாயகமே, நாயகனின் தரிசனம் எங்களுக்கு தெளிவாக வெளியாக நல் இதயத்தை தந்தருளுங்கள்.

யா அமானல் ஹாலிகீனா
யாரஜா அல் ஆ'(d)திரீனா
(d)தும்ளனா ஹிர்ஜன் அமீனா
(d)கௌதனா ஜஃ(f)பர் சாதி(d)க்

பொருள்:-

எங்களை மோச நாசங்கள் செய்கிற கொடிய மனித மிருகங்களின் தீங்குகள் வந்து தீண்டாமல் பாதுகாத்தருளும் விசுவாச நாயகரே, சந்தர்ப்பக் கோளாறால் சறுகித் தடுமாறி விழப்போகிற கதியற்றவர்கள் மீது ஆதரவு வைக்கிற எங்கள் நாடாகரான இமாம் ஜாஃபர் சாதிக் எஜமானே, விசுவாசமாக நாங்கள் புரிகிற காரியங்கள் தேய்ந்திருந்தாலும் அவை பலனற்றுப் போகாமல் பாதுகாத்து எங்களுக்குத் தொடர்ந்து நல்லுதவி புரியுங்கள் நாயகமே.

குன்த்(t)து ரஃஸல் அவ்லியாஇ
சிர்த்(t)த(t)தாஜல் அஸ்ஃ(f)பியாஇ
ஃ(f)பக்பினா சூ அல் கலாஇ
ருஷ்(d)தனா ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:

எங்களுக்கு நேர்வழி காண்பிக்க முன்வந்த இமாம் ஜாஃபர் சாதிக் நாயகமே, தாங்கள் மகிமை மிக்க அவுலியாவுக்கெல்லாம் தலைவராக இருக்கிறீர்கள்; உள்ளம் தெளிந்து அகப்பார்வை பெற்ற இறைநேசச் செல்வர்களுக்கு முடி ரத்தினமாக இருக்கிறீர்கள், எனவே நாயகமே எதிர்பாராத வேளையில் எதிர்பாராது வந்து தாக்கக்கூடிய சகல துர்ச் சம்பவங்களினின்றும் எங்களை காப்பாற்றுங்கள். ஆமீன்.

அன்த்(t)த ஹாமின் லில் அனாமி
அன்த்(t)த காலின் லில்மராமி
குன்லனா(b)புர் அஸ் ஸகாமி
ஃ(f)பவ்ஜனா ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

எங்கள் வெற்றி சீலரான இமாம் ஜாஃபர் சாதிக் நாயகமே, தாங்கள் மனிதர்களைப் பாதுக்காக்கிற

வர்களாகவும், அவர்களது நாட்டங்களை இறைவனிடம் மன்றாடி நிறைவேற்றித் தருகிறவர்களாகவும் இருக்கிறீர்கள். ஆகவே எஜமானே; எவ்வித நோயும் எங்களை வந்து பாதிக்காமல் காத்தருளுங்கள் நாயகமே.

ம(d)துஹூகும் சஃ(f)ப்வல்ஃ(f)புஆ (d)தி
வஸ்ஃ(f)புகும் ஃபத்ஹூர்ரஷா(d)தி
ஆத்(t)தினா ஹூஸ்னல் ஜவா(d)தி
கன்ஜனா ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

எங்களது வாழ்க்கைப் புதையலான இமாம் ஜாஃபர் சாதிக் நாயகமே, தங்களை புகழும் போது இதயங்கள் வெளிச்சமடைகின்றன. தங்கள் வர்ணிப்பைக் கேட்கும் போது நேர்வழி துலங்குகிறது. எனவே எஜமானே எங்களுக்கு நற்கொடைகளை அள்ளித் தாருங்கள் நாயகமே.

யாஇலாஹிவஃ(f)புஅன்னா
குல்லு வக்(t)தின் மாஜனைனா
வ(f)ப்தஹன்னா வன்சுரன்னா
(b)பியும்னி ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

நாயனே, செய்யிது இமாம் ஜாஃபர் சாதிக் நாயகத்தின் மகிமை அருள் கொண்டு சகல கேடுகளிலின்று ஒவ்வொரு வேளையும் எங்களை காத்தருள்: எங்களது எல்லாப் பாவங்களையும் மன்னித்து இதயத் தெளிவை ஈந்து ஆத்மஞான பாக்கியம் அளித்து உனது 'லிகா' என்னும் "தரிசனைப்" பேற்றைத் தந்து நற்கிருபை புரிவாயாக ஆமீன்!

வக்லினா குல்லல் முரா(d)தி
அஃ(t)தினா ஹ(t)த்மஸ் ஸஆதி
கின்லனா யவ்மல் மஆ(d)தி
(b)பிமத(d)த்ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

ரட்சகனே, செய்யிதினா இமாம் ஜாஃபர் சாதிக் அவர்கள் உதவி கொண்டு நாங்கள் நாடிய நாட்டங்கள் அனைத்தையும், நிறைவேற்றி அருள்வாயாக. முடிவு

நாளில் எங்களைக் கலிமாவோடு கரை சேர்ப்பாயாக, நியாயத் தீர்ப்பு நாளில் எங்களைச் சீதேவிகளுடன் எழுப்பி பாவ அபாக்கியங்களினின்றும் காப்பாற்றுவாயாக.

வக்(f)பிரான்லி(d)தின்னிளாமி
(d)தஸ்(t)தகீர்(b)பஃ(d)தல்(g)குலாமி
அத்(d)ஹில்ஹு (d)தாரஸ்ஸலாமி
(b)பிஇஜ்ஜி ஜஃ(f)பர் சா (d)திக்

பொருள்:-

கருணை மிகுந்த நாயகனே, இமாம் ஜாஃபர் சாதிக் எஜமானின் மகிமைப் பொருட்டால், இந்த நூலை இயற்றிய குலாம் தஸ்தகீர் சாஹிபு என்னும் பாவி அடியானின் பாவங்கள் அனைத்தையும் பொறுத்து நற்பாக்கிய இல்லமான சுவனபதியில் சேர்த்து 'லிகா' என்னும் உனது தரிசனப் பாக்கியத்தைத் தந்தருள்வாயாக. ஆமீன்.

(f)பைலு சலாத்தில் கமாலி
லில்முஸ்(t)த (f)பா ஃதின்னவாலி
வல்ஆலி அஹ்லில் ஜலாலி
வஷ்ஷைஹி ஜஃ(f)பர் சா(d)திக்

பொருள்:-

அருளும், பொருளும் நிறைந்த சலவாத்தாகிறது. கண்ணியம் குடிகொண்ட வள்ளல் ரசூல் (ஸல்) அவர்கள் மீதும், சிறப்பு மிக்க அவர்களது கிளையார், கோத்திரத்தார் மீதும், ஷைகு இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் அவர்கள் மீதும் உண்டாவதாக. ஆமீன், ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

அஸ்மாவுல் அக்பரிய்யா

செய்யிதினா இமாமுல் அஃலம் இமாம் ஜாஃபருஸ்ஸாதிக்ரலி, அல்லாஹுு அன்ஹுு நாயகம் அவர்களின் சிறப்பான பதினாறு திருநாமங்களாகிய ''அஸ்மாவுல் அக்பரிய்யா'' இஸ்முகளிலெல்லாம் தனித்துவமும் மகத்துவமும் வாய்ந்ததாகும். ஆத்மீக பாதைகளில் நடப்போருக்கு இது ஓர் அபயச் சீட்டு. உலகின் சகல காரியங்களிலும் நாட்டமுடையவர்களுக்கு ஓர் அருட்சுரங்கம்.

ஜின்னுகள், தேவுகள், கெட்ட ஆவிகள், பேய், பிசாசுகள் ஆகியவற்றின் ஊசாட்டங்களை சங்கை மிகுந்த இந்த திருநாமங்களைக் கொண்டு நீக்கிக் கொள்ளமுடியும். எதிரிகளின் அச்சத்திலிருந்தும் எவரொருவரும் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இது ஒரு வலிமை மிகுந்த அரணாகும்.

வியாபாரத்தில் வெற்றி, தொழிலில் அபிவிருத்தி, கலை கல்விகளில் தேர்ச்சி முதலியவற்றை அடைவதற்கு"அஸ்மாவுல் அக்பரிய்யா" பரீட்சிக்கப் பெற்ற இஸ்மாகும். உடல் மனப் பிணிகளையும், பிணி வகைகளில் யாராலும் தீர்க்க முடியாமல் கைவிடப்பட்ட கொடியப்பிணிகளையும் தீர்ப்பதில் இது ஓர் அமுத சஞ்சீவியாகும்.

அகமிய ஞானக் கடலில் மூழ்கி இர்ஃபான் என்னும் அறிவு முத்தெடுக்க முனையும் முரீதீன்கள், நாயகம் அவர்களின் இஸ்முகளை கவசம் போல அணிந்து கொள்வது சாலச்சிறந்ததாகும்.

எனவே இந்த இஸ்முகளை ஓதத் துவங்குவோர் பரிசுத்தத்துடனும் ஒலுவுடன் அமர்ந்து மணமுள்ள புகைகளைப் புகைத்து இமாம் ஜஃபருஸ்ஸாதிக் (ரலி) நாயகம் அவர்கள் அடக்கமாகியுள்ள மதினாவின் திசையை நோக்கி சங்கையுடனும் மரியாதையுடனும் குரல் தாழ்த்தி தினந்தோறும் பதினாறு முறை ஓதித் தங்கள் நாட்டத்தைக் கேட்டு மன்றாடுவார்களேயானால் சகல நல்ல நாட்டங்களும் முராதுகளும் நாயகம் அவர்களின் பரக்கத்தைக் கொண்டு நிறைவேறும்! ஆமீன்.

(B)பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிற் றஹீம்.

அல்லாஹு ஃம்ம ஸல்லி அலா ஸய்யி (D)தினா வஸிற்றினா வஜஹ்ரினா 'வரூஹினா'வகல் (B) பினா வக(B) பி(D)தினா வ இஸ்மினா'வ அவ்வலினா' வ ஆஃகிரினா 'வளாஹிரினா' வ(B) பாதினினா 'வமவ்லானா'முஹம்ம(D)தின்வ ஆலிஹி 'வஜமாலினா' வஜலாலினா வ கமாலினா 'வ இமாமினா' வ மவ்லானா ஸிர்ருல் வாஸிலீன 'வல்முவஹ்ஹி (D)தீன' 'மாலிகில் கம்காம் 'வஸ்ஸம்ஸாம் வாரி (D)துர் ரஸூல் வல் உஸூல் வஸய்யிதி (D)னா வமவ்லானா இமாம் ஜஃ(F)பருஸா (D)திகுல் உகூல் (B)பி அல் (F)பி அல் (F)பி ஸலவாதின் வதஹிய்யாதின் வதஸ்லீமாதின் வதஃலீ மாதின் வஸலாமின் வ பாரிக் வஸல்லிம் அலைஹி.

1. யாஇமாமல் அஃளம் யாவல (D)தந்ந(B)பிய்யில் முஸ்த(F)பல் முஃக்தாரில் அமீன் வயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸா (D)திகுத்தா (B)பியீன்.

2. யா இமாமல் அஃளம் யா ஹ (F)பீ(D)தல் அலியல் முஅல்லாவல்ஹஸனி வல்ஹுஸைனி வயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸா (D)திகுல் ஆ (B)பிதீ (D)ன்

3. யா இமாமல் அஃளம் யாஸப் (F)வாத அவ்லி யாயில் அத்கியாஇல் மு(B)பீன் வாயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸாதி(D)குஸ்ஸாதிகீன்.

Powered by CamScanner

4. யா இமாமல் அஃஃளம் யா (F)பஃஃக்ரல் முத்த கீன் வல் முகர்ரீ பீ (B)ன் வல்மகீன் வயா இமாமு ஜஃப(F)பருஸ்ஸா (D)தி குல் முவஹ்ஹி(D)தீன்

5. யாஇமாமல் அஃஃளம் யா(D)துஃகுரல் முஹக்கிகீன் வல்மு(D)தக்கிகீன் வயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸா (D)தி குல் காமி லீன்.

6. யாஇமாமல் அஃஃளம் யாஸுல் தானல் முஸன்னி (f)பீன வல்முப(F)ஸ்ஸிரீனல் அளீமி வயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸாதி (D)குஸ்ஸாஹி தீ(D)ன்.

7. யாஇமாமல் அஃஃளம் ஸர்(D)தா ருஷ்ஷா கிரீன வத் (D)தாகிரீனஸ்ஸலீம் வயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸா (D)திகுல் முகம்மிலீன்.

8. யாஇமாமல் அஃஃளம் யானஸிரல் ஆஷி கீன வல்வாஸிலினற்றஹீம் வயா இமாமு ஜஃ(F) பருஸ்ஸா(D)திகுல் முஃமினீன்.

9. யாஇமாமல் அஃஃளம் மத்லவுல் அன்வாரி வல்அஸ்ராரின் னயீம் வயா இமாமு ஜஃ(f)பருஸ் ஸா(D) திகுல் முன்இமீன்.

10. யா இமாமல் அஃஃளம் மக்(B)பூல ர(B)ப்பல் ஜப்(B)பாரி வல்(G)னப்(F)பாரில்கரீம் வயா இமாமு ஜஃ (F)பருஸ்ஸா(D)தி குல்மு(F)ப்ரி (D)தீன்.

11. யா இமாமல் அஃஃளம் யாமஃஃஷ˜கல் ஹன்னானில் க(D)தீம் வயா இமாமு ஜஃ(F)பருஸ்ஸா (D) தி குல் முஸ்லிஹீன்.

வக்ளி ஹாஜாதீ வஹாஜாதினா(F)பித் (D) தீனிவத் (D)துன்யாவல் ஆஃஃகிரதி இன்னக. அலா குல்லிஷையின் க(D) தீர். (B)பீ இஜா (B)பதிஜ(D)தீருநிஃஃமல் மவ்லா வ நிஃஃமன்னஸீறு வஸல்லல் லாஹு˜அலா ஸய்யி(D)தினா ஹபீ (B)பினா வந(B) பிய்யினா வமவ்லானா முஹம்மதி (D) னில்(B)பஷீருன் ன(D)தீரு ˋவ அலா ஆலி ஹில் முனீறு. வஅஸ்ஹா(B) பிஹில் க (B) பீறு வஅவ்லாதி ஹில், அமீறு வ அஹ்ல (B) பைதி ஹில் க(D)தீறு வகரமிகல் க(D)தீறு வல்ஹம்(D)துலில்லாஹி ரப்(B)பில் ஆலமீன்.

'துஆ'

இந்த 'துஆ' வை ஓதி தன் நாட்டத்தைப் பற்றி வஸீலாத்தேடி ஹதியா செய்யவும்.

அல்லாஹு˜ம்ம லகல் ஹம்து வலகஸு˜க்ருயா அல்லாஹு˜ யாமலிகு யாகுல்தான்; யாவஹ்ஹா (b)பு யா(d)தல் மன்னி (b)பில் ஃஅ (d) த்லி வல்இஹ்ஸான் அல்லாஹு˜ம்ம ஸல்லி வஸல்லிம் ஸய்யி (d) தில்

'ஹலா ஃஇகிவல் ஜான் வபாரிக் ஃஅலா ஸய்யி (d) தினா வமவ்லானா முஹம்மதின் வஃஅலா ஆலிஹீ வஸஹ்(b)பிஹி வ இத்ரதிஹி வ (d) தாம தகற்றறல் ஜ தீ (d) தான்; அல்லாஹு"ம்ம யாநூரு தநவ்வர்த் (b)பின்நூரி வன்னூரு (f)பீநூரி நூரிக யாநூரு வ நவ்வீர் (f)புஃஆ (d)தனா (b) பீநூரில் ஹிக்மதி வல்ஃஇர் (f)பான்; அல்லாஹு"ம்ம யாறஜ்ஜாகு தறஜ்ஜக்த (b)பிற்றிஜ்கி வற்றிஜ்கு(f)பீறிஜ்கி ரிஜ்கி(k)க யாறஜ்ஜாகு வஸ்ஸிஃ அர்ஜாகனா(b)பி (g)ஙய்ரி ஹு"ஸ் (b)பான்; அல்லாஹு"ம்ம யாசலாம் தஸல்லம்த (b) பிஸ்ஸலாமதி வஸ்ஸலாமது (f) பீஸலாமதி வஸலாமதிக யாசலாமு ஸல்லிம்னாமினல் முஸீ(b)பாதி வஷ்ஷர்ரிஜ்ஜமானி வகய்திஷ்ஷய்தான்; அல்லாஹு"ம்ம யாரஹ்மானு தறஹ்ஹம்த (b) பிற்றஹ்மதி வற்றஹ்மது (f)பீ றஹ்மதி றஹ்மதிக யாறஹ்மானு இற்ஹம்னா (f)பிறஹ்மதிக யாறஹ்மான் அல்லாஹு"ம்ம யா(f)பத்தாஹு"த(f)பத்தஹ்த (b)பில் (f)பத்ஹி வல் (f)பத்ஹு" (f) பீ (f) பத்ஹிகயா (f) பத்தாஹ் இ (f) ப்தஹ்ஃஅலைனா அ(b)ப்வாப (b)பிறப்பிக வ(f)பளூலிக மஃஅல் இஹ்ஸான். அல்லாஹு"ம்ம யாஃஅலிம தஃஅல்லம்த (b)பில் ஃஇல்மி வல்ஃஇல்மு (f) பீஃஇல்மி ஃஇல்மிக யாஃஅலீமு உர்ஜு"க்னா ஃஇல்மத்தவ்ஹீ(d)தி வஃஅமலுல் இஹ்லாசி வசலா மதல் ஈமான் அல்லாஹு"ம்ம யாஃ அஜீஜு" தஃ அஜ்ஜஜ்த (b)பில்ஃஇஜ்ஜதி

வல்ஃஇஜ்ஜது(f) பீஃஇஜ்ஜதி ஃஇஜ்ஜதிக யாஃஅஜீஜு ஃஅஜ்ஜிஜ் ஆஜாலனா (b)பிலி காஃஇகஸ்ஸுஃ(d)தான் அல்லா ஹும்ம யாகரீமு கற்றம்த(b) பில்கரமி வல்கரமு (f)பீகரமிக யாகரீமு அக்ரிம் (b) பின்கிளாஃஇ ஹவாஃ இஜினா (b)பிஃஅளீமிஷ்ஷான் (b)பல்லி (g)ஙில்லாஹும்ம ஃதவா (b)பமாகரஃனாஹுவமா சல்லைனாஹுவமா அன்ச (d)த்னாஹுமின்கசா ஃஇ(d) தி அவ்லியாஃஇ கற்றிள் வான் ஹா தி ஹி ஹ (d) தியதன்வ் வாசிலதன்வ் வறஹ்மதன் நாஜி லதன்மமக் (b) பூலதன் மின்னா இலா ஹள்ரதின் னபிய்யில் அக்ரமி சய்யிதில் ஃஅர (b) பிவல்ஃஅஜமி மின் ஆலி ஹாஷிமி(d) தா (f)பிஃஇல் (b) பலாஃஇ வல்வ(b)பாஃஇ வல்கஹ்தி வல்அலமி ஸய்யிதினா வமவுலானா முஹம்மதின் சல்லல்லாஹு ஃஅலைஹிவஸல்லம் (d) தும்ம இலாஜமீஃஇல் ஆலி வல் அஸ்ஹா (b) பிவல் அத் (b) பாஃஇ வல்ஹிஜ் (பில்) அஃளம் ஃதும்மஇலா ஹளரதி தாஜில் இமாமில் ஹுமாமி ஹய்ரில் அனாமி மிஷ் (b) பாஹிள்ளலாமி முஹ்யிஸ்ஸுன்னதி வல் இஸ்லாமி மல்ஜாஃஇ அஹ்லில் மகா(b) பிரிவல்கிராம் மவ்லானா ஸய்யிதில் ஹலாஃஇகி அல்முன்தஹி (f) பீஃஉலூமி (d)த்தகாஃஇகி, அல்முர்தளா ஃஇன் (d) தல்லாஹில் ஹாலிகி அஸ்ஸய்யி(d) தில் இமாமி ஜஃ(f) பருஷ்சா (d) திகி; வர்ஜுகில்லா ஹும்மலனா வலிஜமாஃஅதில் ஹாளிரீன் ரிஜ்கன்வ் வாஹிஃஅன்வ் வ(d) தல்லதன் (g)

கனீமன்வ் வஃஇல்மன்னா (f) பிஃஅன்வ்வஃஅமலன் முத(b) பற்றிளன்வ்வ(d) துஃஆஃ அன்ம் முஸ்தாஜா (b)பன்வ்வ (f)பத்ஹன் கரீ (b)பன் வச(b)ப்ரன் ஜமீலன் வல்ஃஆபியத மின்ஜமிஃஇல் (b)பலாஃஇ யாற (b)ப்பல் ஃஆலமீன் அல்லாஹுஊம்ம லாத (d)த் உலனா(f) பீமகாமினாஹா (d)தா (d)தன் (b) பன் இல்லா கபர்தஹூ வஅலாஃஅய் (b) பன் இல்லா ஸதர்தஹூ வலாஹம்மன் இல்லா(f)பர்ரஜ்தஹூ வலா ஹவ்(f)பன் இல்லா கஸ(f)ப்தஹூ வலாஸக்மன் இல்லா ஷா (f)பய்தஹூ வலா (d)தய்னன் இல்லா அ(d)த்தய்தஹூ வலாஸாஃஇலன் இல்லா அஜ(b)ப் தஹூவலாஹாஜதன் மின் ஹவாஃஇஜித்(d)துன்யா வல்ஆஹிரதி இல்லா களய்தஹா வலா(b)பலாஃஅன் இல்லா (b) பரஃதஹாயா றப்(b)பல் ஃஆலமீன் (f)பதகப்(b)பல் (d)துஆஃஅனா (b)பிஹுூர்மதின்ன(b)பிய்யில் முஸ்த(f)பா ஸய்யி(d)தில் முர்ஸலீன் வ(b)பி ஹுூர்மதி ஆலிஹி வசஹ்(b)பிஹி அஜ்மஃஈன்;வ(b)பி ஹுூர்மதி ஸய்யி (d)தினா ஜஃ(f)பர் சா (d)திகுல் அமீன் (b)பிரஹ்மதிக யா அர்ஹமற்றாஹிமீன் வஅ(f)ப்ளலஸ்ஸலவாதி வஅதம்முத் தஸ்லீமாதி ஃஅலா ஸய்யி (d) தினா வந(b) பிய்யினா முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹா (b) பிஹி வ இத்ர திஹி வஃஅஷீரதிஹி குல்லிஹிம் அஜ்மஃஈன் ஸுூ(b)ப் ஹான ர(b)ப்பிக ற(b)ப்பில் ஃஇஜ்ஜதிஃஅம்மா யஸி(f)பூன்; வஸலா முன் அலல்முர்ஸலீன வல்ஹம் (d)துலில் லாஹி ற(b)ப்பில் ஃஆலமீன்.

بِرَحْمَتِكَ يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ ، وَاَفْضَل
الصَّلَوَاتِ وَاَتَمُّ التَّسْلِيْمَاتِ عَلٰى سَيِّدِنَا
وَنَبِيِّنَا مُحَمَّدٍ وَّاٰلِهٖ وَاَصْحَابِهٖ وَعِتْرَتِهٖ
وَعَشِيْرَتِهٖ كُلِّهِمْ اَجْمَعِيْنَ ، سُبْحَانَ رَبِّكَ
رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ ، وَسَلَامٌ عَلَى
الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ
الْعٰلَمِيْنَ ○

تَمَّتْ

بِالْخَيْرِ وَالثَّواب واللّٰه اَعلم بالصواب

کتبہٗ عبد اللہ باقوی ۶ نہرو کالنی ۴ اسٹریٹ مدراس

وَّدُعَاءً مُّسْتَجَابًا وَّفَتْحًا قَرِيْبًا وَّصَبْرًا جَمِيْلًا

وَالْعَافِيَةَ مِنْ جَمِيْعِ الْبَلَآءِ يَارَبَّ الْعٰلَمِيْنَ

اَللّٰهُمَّ لَاتَدَعْ لَنَا فِيْ مَقَامِنَا هٰذَا ذَنْبًا

اِلَّا غَفَرْتَهٗ وَلَاعَيْبًا اِلَّا سَتَرْتَهٗ وَلَاهَمًّا

اِلَّا فَرَّجْتَهٗ وَلَاخَوْفًا اِلَّا كَشَفْتَهٗ وَلَاسَقَمًا

اِلَّا شَافَيْتَهٗ وَلَادَيْنًا اِلَّا اَدَّيْتَهٗ وَلَاسَآئِلًا

اِلَّا اَجَبْتَهٗ وَلَاحَاجَةً مِنْ حَوَائِجِ الدُّنْيَا وَالْاٰخِرَةِ

اِلَّا قَضَيْتَهَا وَلَابَلَآءً اِلَّا اَبْرَأْتَهَا يَارَبَّ الْعَالَمِيْنَ

فَتَقَبَّلْ دُعَائَنَا بِحُرْمَةِ النَّبِيِّ الْمُصْطَفٰى سَيِّدِ

الْمُرْسَلِيْنَ وَبِحُرْمَةِ اٰلِهٖ وَصَحْبِهٖ اَجْمَعِيْنَ

وَبِحُرْمَةِ سَيِّدِنَا جَعْفَرُ الصَّادِقُ الْاَمِيْنَ

Powered by CamScanner

الْاَكْرَمْ سَيِّدِ الْعَرَبِ وَالْعَجَمِ مِنْ اٰلِ هَاشِمٍ
دَافِعِ الْبَلَاءِ وَالْوَبَآءِ وَالْقَحْطِ وَالْاَلَمِ سَيِّدِ نَا
وَمَوْلَانَا مُحَمَّدٍ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ، ثُمَّ اِلٰى
جَمِيْعِ الْاٰلِ وَالْاَصْحَابِ وَالْاَتْبَاعِ وَالْحِزْبِ الْاَعْظَمِ
ثُمَّ اِلٰى حَضْرَةِ تَاجِ الْاِمَامِ الْهُمَامِ، خَيْرِ الْاَنَامِ
مِصْبَاحِ الظَّلَامِ مُحْيِي السُّنَّةِ وَالْاِسْلَامِ، مَلْجَآءِ
اَهْلِ الْمَكَابِرِ وَالْكِرَامِ مَوْلٰنَا سَيِّدِ الْخَلَائِقِ
اَلْمُنْتَهِيْ فِيْ عُلُوْمِ الدَّقَآئِقِ، اَلْمُرْتَضٰى عِنْدَ اللّٰهِ
الْخَالِقِ، اَلسَّيِّدِ الْاِمَامِ جَعْفَرُ الصَّادِقِ، وَارْزُقِ
اللّٰهُمَّ لَنَا وَلِجَمَاعَةِ الْحَاضِرِيْنَ رِزْقًا وَّاسِعًا
وَّدَوْلَةً غَنِيًّا وَّعِلْمًا نَّافِعًا وَّعَمَلًا مُّتَبَرِّكًا

فَتْحِكَ يَافَتَّاحُ اِفْتَحْ عَلَيْنَا اَبْوَابَ بِرِّكَ وَفَضْلِكَ مَعَ الْاِحْسَانِ، اَللّٰهُمَّ يَا عَلِيمُ تَعَلَّمْتَ بِالْعِلْمِ وَالْعِلْمُ فِي عِلْمِ عِلْمِكَ يَا عَلِيمُ اُرْزُقْنَا عِلْمَ التَّوْحِيدِ وَعَمَلَ الْاِخْلَاصِ وَسَلَامَةَ الْاِيمَانِ، اَللّٰهُمَّ يَا عَزِيزُ تَعَزَّزْتَ بِالْعِزِّ وَالْعِزَّةُ فِي عِزَّةِ عِزَّتِكَ يَا عَزِيزُ عَزِّزْنَا اٰجَالَنَا بِلِقَائِكَ السُّعْدَانِ اَللّٰهُمَّ يَا كَرِيمُ كَرَّمْتَ بِالْكَرَمِ وَالْكَرَمُ فِي كَرَمِكَ يَا كَرِيمُ اَكْرِمْ بِانْقِضَاءِ حَوَائِجِنَا بِعَظِيمِ الشَّانِ ، بَلِّغِ اللّٰهُمَّ ثَوَابَ مَا قَرَأْنَاهُ وَمَا صَلَّيْنَاهُ وَمَا اَنْشَدْنَاهُ مِنْ قَصَائِدِ اَوْلِيَائِكَ الرِّضْوَانِ، هٰذِهٖ هَدِيَّةً وَّاصِلَةً وَّرَحْمَةً نَازِلَةً مَقْبُولَةً مِّنَّا اِلٰى حَضْرَةِ النَّبِيِّ

عَلٰى سَيِّدِنَا وَمَوْلٰينَا مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِهٖ وَصَحْبِهٖ
وَعِتْرَتِهٖ وَدَامَ تَكَرُّرَ الْجَدِيْدَانِ ، اَللّٰهُمَّ يَا نُوْرُ
تَنَوَّرْتَ بِالنُّوْرِ وَالنُّوْرُ فِيْ نُوْرِ نُوْرِكَ يَا نُوْرُ وَنَوِّرْ
فُؤَادَنَا بِنُوْرِ الْحِكْمَةِ وَالْعِرْفَانِ ، اَللّٰهُمَّ يَا رَزَّاقُ
تَرَزَّقْتَ بِالرِّزْقِ وَالرِّزْقُ فِيْ رِزْقِ رِزْقِكَ
يَا رَزَّاقُ وَسِّعْ اَرْزَاقَنَا بِغَيْرِ حُسْبَانٍ ، اَللّٰهُمَّ
يَا سَلَامُ تَسَلَّمْتَ بِالسَّلَامَةِ وَالسَّلَامَةُ فِيْ
سَلَامَةِ وَسَلَامَتِكَ يَا سَلَامُ سَلِّمْنَا مِنَ الْمُصِيْبَاتِ
وَشَرِّ الزَّمَانِ وَكَيْدِ الشَّيْطَانِ ، اَللّٰهُمَّ يَا رَحْمٰنُ
تَرَحَّمْتَ بِالرَّحْمَتِ وَالرَّحْمَةُ فِيْ رَحْمَةِ رَحْمَتِكَ يَا
رَحْمٰنُ اِرْحَمْنَا بِرَحْمَتِكَ يَا رَحْمٰنُ اَللّٰهُمَّ
يَا فَتَّاحُ تَفَتَّحْتَ بِالْفَتْحِ وَالْفَتْحُ فِيْ فَتْحِ

Powered by CamScanner

الْمَوْلٰى وَنِعْمَ النَّصِيْرُ وَصَلَّى اللّٰهُ عَلٰى سَيِّدِنَا
وَحَبِيْبِنَا وَنَبِيِّنَا وَمَوْلٰنَا مُحَمَّدِنِ الْبَشِيْرُ النَّذِيْرُ
وَعَلٰى اٰلِهِ الْمُنِيْرُ وَاَصْحَابِهِ الْكَبِيْرُ وَاَوْلَادِهِ
الْاَمِيْرُ وَاَهْلُ بَيْتِهِ الْكَثِيْرُ وَكَرَمِكَ الْقَدِيْرُ
وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۝

اِنْتْ دُعَاوِيْ اُوْثِ تَنْ نَادَّتِّيْ فَرِّ وَسِيْلَةْ
تِيْدِ هَدْ يَاهْ چِيَّوُمْ

اَللّٰهُمَّ لَكَ الْحَمْدُ وَلَكَ الشُّكْرُ يَا اَللّٰهُ يَامَلِكُ
يَاسُلْطَانُ يَاوَهَّابُ يَاذَا الْمَنِّ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ،
اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ سَيِّدِ الْخَلَائِقِ وَالْجَانِ، وَبَارِكْ

يَا اِمَامَ الْاَعْظَمْ مَطْلَعُ الْاَنْوَارِ وَالْاَسْرَارِ النَّعِيْمِ
وَيَا اِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الْمُنْعِمِيْنَ ۝

يَا اِمَامَ الْاَعْظَمْ مَقْبُوْلَ رَبِّ الْجَبَّارِ وَالْغَفَّارِ الْكَرِيْمِ
وَيَا اِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الْمُفْرِدِيْنَ ۝

يَا اِمَامَ الْاَعْظَمْ يَا مَعْشُوْقَ الْحَنَّانِ الْقَدِيْمِ
وَيَا اِمَامْ جَعْفَرُ الصَّادِقُ الْمُصْلِحِيْنَ ۝

وَاقْضِ حَاجَتِيْ وَحَاجَاتِنَا فِى الدِّيْنِ وَالدُّنْيَا وَالْاٰخِرَةِ
اِنَّكَ عَلٰى كُلِّ شَيْئٍ قَدِيْرُ ۝ بِاِجَابَةِ جَدِيْرُ نِعْمَ

یَااِمَامَ الْاَعْظَمْ یَاذُخْرَ الْمُحَقِّقِیْنَ وَالْمُدَقِّقِیْنَ

وَیَااِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الْکَامِلِیْنَ ۝

یَااِمَامَ الْاَعْظَمْ یَاسُلْطَانَ الْمُصَنِّفِیْنَ وَالْمُفَسِّرِیْنَ الْعَظِیْمِ

وَیَااِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الزَّاهِدِیْنَ ۝

یَااِمَامَ الْاَعْظَمْ سَرْدَارُ الشَّاکِرِیْنَ وَالذَّاکِرِیْنَ السَّالِیْمِ

وَیَااِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الْمُکَمِّلِیْنَ ۝

یَااِمَامَ الْاَعْظَمْ یَانَصِیْرَ الْعَاشِقِیْنَ وَالْوَاصِلِیْنَ الرَّحِیْمِ

وَیَااِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الْمُؤْمِنِیْنَ ۝

Powered by CamScanner

یَا اِمَامَ الْاَعْظَمْ یَا وَلَدَ النَّبِیِّ الْمُصْطَفٰی الْمُخْتَارِ الْاَمِیْنْ

وَیَا اِمَامُ جَعْفَرُ الصَّادِقُ التَّابِعِیْنْ ۝

یَا اِمَامَ الْاَعْظَمْ یَا حَفِیْدَ الْعَلِیِّ الْمُعَلّٰی وَالْحَسَنِ وَالْحُسَیْنِ

وَیَا اِمَامَ جَعْفَرُ الصَّادِقُ الْعَابِدِیْنْ ۝

یَا اِمَامَ الْاَعْظَمْ یَا صَفْوَاۃَ اَوْلِیَاۓ وَالْاَتْقِیَاءِ الْمُبِیْنْ

وَیَا اِمَامُ جَعْفَرُ الصَّادِقُ السَّالِکِیْنْ ۝

یَا اِمَامَ الْاَعْظَمْ یَا فَخْرَ الْمُتَّقِیْنَ وَالْمُقَرَّبِیْنَ وَالْمَکِیْنَ

وَیَا اِمَامُ جَعْفَرُ الصَّادِقُ الْمُوَحِّدِیْنَ ۝

هٰذِهٖ اَسمآءِ الاَکبَرِیَّہ
مَعَ وَسِیْلَۃِ
اِمَامُ الاَعْظَمُ اِمَامُ جَعْفَرُ الصَّادِق رض

بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

اَللّٰھُمَّ صَلِّ عَلٰی سَیِّدِنَا، وَسِرِّنَا، وَجَھْرِنَا، وَرُوْحِنَا، وَقَلْبِنَا،
وَکَبِدِنَا، وَاِسْمِنَا، وَاَوَّلِنَا، وَاٰخِرِنَا، وَظَاھِرِنَا، وَبَاطِنِنَا،
وَمَوْلٰینَا، مُحَمَّدٍ وَّاٰلِہٖ، وَجَمَالِنَا، وَجَلَالِنَا، وَکَمَالِنَا،
وَاِمَامِنَا، وَمَوْلٰینَا، سِرِّ الْوَاصِلِیْنَ، وَالْمُوَحِّدِیْنَ، مَالِکِ
الْقَمْقَامِ، وَالصَّمْصَامِ، وَارِثُ الرَّسُوْلِ، وَالْاُصُوْلِ،
وَسَیِّدِنَا، وَمَوْلَانَا، اِمَامُ جَعْفَرٍ صَادِقُ الْعُقُوْلِ بِاَلْفِ اَلْفِ صَلٰوۃٍ
وَتَحِیَّۃٍ، وَتَسْلِیْمًا، وَتَعْظِیْمًا، وَسَلَامٍ وَبَارِکْ وَسَلِّمْ عَلَیْہِ ○

اِتُوَاكِرَتُ سَيِّدُنَا اِمَامُ جَعْفَرُ الصَّادِقُ رَضِيَ اللهُ عَنْهُ
نَايِكَمْ وَرْ ڱَضِنْ سِرَفْ تَبِڱِيَ ١١م فَتِنُوڗْ تِرُ نَامَ مَاكْ
اِرُكَمْ، اِنِّي يَاتْرُ حَاجَةً دَنْ تِنَمْ تُوُرُمْ ١١م فَتِنُوڗُ
وِدُتَّمْ اُوِنِّي وَنْتَالْ سَبْكِي فِرُنْتِيَه نَايِكَمْ اَوَرْڱَضِنْ
فِرُدَّالْ سَكَّالْ حَاجَةً مُرْنِرِيْ وِرُمْ، اٰمِيْنْ۔
سَبْكِي كِرِيَ نَايِكَمْ اِمَامْ جَعْفَرُ الصَّادِقُ رَضِيَ اللهُ عَنْهُ
هِجْرَة ٨٣ وَرُدَمْ، رَبِيْعُ الْاَوَّلْ مَاثَمْ، فِرَيْ ١٧ اِنْ
تِڱِكَضْ كِلَمِي مَدِيْنَه شَرِيْفِلْ فِرَنْتَارْكَضْ هِجْرَة ١٤٨
وَرُدَمْ، رَجَبْ مَاثَمْ فِرَيْ ١٥ تِلْ تِڱِكَضْ كِلَمِي
وَفَاتَابْ كَضْ، اِوَرْ كَضْنْ مَقْبَرَا شَرِيْفُ مَدِيْنَه
شَرِيْفِلْ اَلْجَنَّةُ الْبَقِيْعُ اِلْ اِكَّرَاثُ۔

وَاقْضِنَا كُلَّ الْمُرَادِ قِنْ لَنَا يَوْمَ الْمَعَادِ	اَعْطِنَا خَتْمَ السَّعَادِ بِسَدْ جَعْفَرِ الصَّادِقْ
وَاغْفِرَنْ لِذِی النِّظَامِ اَدْخِلْهُ دَارَ السَّلَامِ	دَسْتْگِیرْ بَعْدَ الْغُلَامِ بِعِزِّ جَعْفَرِ الصَّادِقْ
فَیْضُ صَلَاةِ الْكَمَالِ وَالْاٰلِ اَهْلِ الْجَلَالِ	لِلْمُصْطَفٰی ذِی النَّوَالِ وَالشَّیْخِ جَعْفَرِ الصَّادِقْ

كُنْتُ رَأْسَ الْاَوْلِيَآءِ فَاكْفِنَا سُوْءَ الْقَضَآءِ	صِرْتَ تَاجَ الْاَصْفِيَآءِ رُشْدُنَا جَعْفَرُ الصَّادِقِ
اَنْتَ حَامٍ لِلْاَنَامِ كُنْ لَنَا بُرْءَ السَّقَامِ	اَنْتَ قَاضٍ لِلْمَرَامِ فَوْزُنَا جَعْفَرُ الصَّادِقِ
مَدْحُكُمْ صَفْوُ الْفُؤَادِ اٰتِنَا حُسْنَ الْجَوَادِ	وَصْفُكُمْ فَتْحُ الرَّشَادِ كَنْزُنَا جَعْفَرُ الصَّادِقِ
يَا اِلٰهِيْ وَاعْفُ عَنَّا وَافْتَحَنَّا وَانْصُرَنَّا	كُلَّ وَقْتٍ مَا جَنَيْنَا بِيُمْنِ جَعْفَرُ الصَّادِقِ

رَضِيَ اللهُ عَنْهُ الْخَالِقْ   مَوْلٰنَا جَعْفَرْ صَادِقْ

اَنْتَ قَصِيْدَةُ اِثْوَايِرْكُمْ

يَا اِمَامُ كُلِّ فَائِقْ   يَا اِمَامُ كُلِّ وَاثِقْ

عَنْكُمْ رِضَاءُ الْخَالِقْ   مَوْلَانَا جَعْفَرْ صَادِقْ

يَا نَجِيْلَ الْبَاقِرِيِّ   نُوْرَ عَيْنَى الْعَلِيِّ

اِتِنَا قَلْبَ الصَّفِيِّ   شَيْخَنَا جَعْفَرُ الصَّادِقْ

يَا اَمَانَ الْهَالِكِيْنَا   يَا رَجَاءَ الْعَاثِرِيْنَا

دُمْ لَنَا حِرْزًا اَمِيْنَا   غَوْثَنَا جَعْفَرُ الصَّادِقْ

فَاغْفِرْ ذُنُوْبَ نَانَا وَارْزُقْ لَهُ عِرْفَانَا	صَاحِبْ اَيَارْحْمَانَا بِجَاهِ جَعْفَرْ صَادِقْ
اَرْكِي الصَّلٰوةِ الْاَجْسَمْ وَاٰلِ حِزْبِ الْاَعْظَمْ	عَلَى الرَّءُوْفِ الْاَكْرَمْ وَاِمَامْ جَعْفَرْ صَادِقْ

اِثُو اكرث سَيِّدِنَا اِمَامْ جَعْفَرْ صَادِقْ نَايَكُمْ
اَوَرْ كَضِنْ تِرُ فَيَّرَالْ وَسِيلَةْ تِيدِ اُوْثُمْ
قَصِيْدَةْ وَاكَيُرُ كُمْ اِنْتَ قَصِيْدَةْ وَىْ اُوْثِيل
حَاضِرَايِرْ فُوَرْ كَضِنْ اِثَيْ اُوْثُوْتْ تِلَمَا يِرُكُمْ

رَضِيَ اللهُ عَنْهُ الْخَالِقْ	رَضِيَ اللهُ عَنْهُ الرَّازِقْ

ذَاقَ شَهِيْدُ الْاَسْعَدْ	رَجَبًا بِحَيِّ الْاَبْجَدْ
فِيْ عَامِ يُمْنِ الْاَزْهَدْ	اَلشَّيْخ جَعْفَرْ صَادِقْ
يَا رَبَّنَا رَحِيْمًا	فَاغْفِرْ لَنَا دَوَامًا
اَسْعِدْ لَنَا خِتَامًا	بِجَاهِ جَعْفَرْ صَادِقْ
وَارْزُقْ لَهُ الْوَسِيْلَةْ	وَالدَّرَجَةُ الْفَضِيْلَةْ
وَالشَّرْفَةَ الْجَمِيْلَةْ	لِاِمَامِ جَعْفَرْ صَادِقْ
وَرَضِيْنَهُ رَضِيًّا	اَسْكِنْهُ دَارَ عُلْيَا
لُقْيَاكَ اٰتِ صَفِيًّا	لِاِمَامِ جَعْفَرْ صَادِقْ

إِذْ مَا شَكَتْهُ عُدْ مَا	زَوْجَةُ مَنْ غَابَ نَدَمَا
حُبِّيْ بِالْآلِ كَرَمَا	قَدْ قَالَ جَعْفَرُ صَادِقْ
وَكَذَا الثَّرِيْدَ صَنَعَتْ	سَبْعَ الْمَثَانِ قَرَأَتْ
أَهْلَ الْعَبَاءِ قَصَدَتْ	كَأَمْرِ جَعْفَرَ صَادِقْ
فَالزَّوْجُ نَالَ ذِكْرًا	رَجَبًا تَضُمُّ حِرْزًا
فِيْهِ زِيَادُ رَمْزًا	بِجَاهِ جَعْفَرَ صَادِقْ
وَرَدَ الْوَزِيْرُ حَدَثَانِ	بِوُجُوْدِ الْأَهْلِ لَوْمَانْ
قَدْ فَازَ بَعْدَ الْعُفْوَانْ	بِأَمَانِ جَعْفَرَ صَادِقْ

لَا ذُخْرَةَ سِوَى اللّٰه — لَا ذِكْرَهُ اِلَّا اللّٰه
لَا شَوْقَهُ غَيْرَ اللّٰه — اَعْظِمْ بِجَعْفَرَ صَادِق

طُوْلَ اللَّيَالِي قَائِمْ — صَوْمَ النَّهَارِ صَائِمْ
ذِكْرُ الْخَفِيِّ دَائِمْ — اَحْسِنْ بِجَعْفَرَ صَادِق

مَاذَا دَعَا اِلَى اللّٰه — قَدْ نَالَهُ مِنَ اللّٰه
اِذْ رَامَهُ لَدَى اللّٰه — اَكْرِمْ بِجَعْفَرَ صَادِق

كَمْ كَمْ مِّنَ الْكَرَامَةْ — ظَهَرَتْ بِهِ عَلَامَةْ
لِغِيَاثِنَا سَلَامَةْ — بِالشَّيْخِ جَعْفَرَ صَادِق

مِنْ صُلْبِ اَسَدِ الْغَالِب   حَيْدَرِ عَلِيِّ الْوَاهِب
حِفْدُ الْحُسَيْنِ الرَّاقِب   اَكْرِمْ بِجَعْفَرٍ صَادِق

مُوْفِي لِوَعْدٍ كَرَمًا   مُحْيِ لِدِيْنٍ قِيَمًا
مُعْطِي الْجَوَادِ كِتَمًا   اَعْظِمْ بِجَعْفَرٍ صَادِق

اَوْلَى الْاَنَامِ نُقَبًا   اَجْلَى الْكِرَامِ نَسَبًا
اَعْلَى الْمَقَامِ رُتَبًا   اَكْرِمْ بِجَعْفَرٍ صَادِق

طَوَّاعُ اَمْرِ الرَّحْمٰنْ   دَفَّاعُ شَرِّ الشَّيْطَانْ
وَعَّاظُ جَمْعِ الْاِنْسَانْ   اَحْسِنْ بِجَعْفَرٍ صَادِق

Powered by CamScanner

ذَا ضَرْضَمٌ كَرِيمٌ	ذَا صِلْدٍ مُّعَظِيمٌ
ذَا ضَرْغَمٌ جَسِيمٌ	اَحْسِنْ بِجَعْفَرْ صَادِقْ
صَمْصَامُنَا الْمُفَصَّلْ	قَمْقَامُنَا الْمُكَمَّلْ
طَمْطَامُنَا الْمُبَذَّلْ	اَكْرِمْ بِجَعْفَرْ صَادِقْ
تَاجُ الشُّيُوخِ الْاَمْجَدْ	بَازُ الْقُلُوبِ الْاَحْمَدْ
كَنْزُ الْعُلُومِ الْاَرْشَدْ	اَعْظِمْ بِجَعْفَرْ صَادِقْ
نَجْلُ الْاِمَامِ الْاَكْبَرْ	سَيِّدْ مُحَمَّدْ بَاقَرْ
قُوَّةُ طٰهٰ الْاَنْوَرْ	اَحْسِنْ بِجَعْفَرْ صَادِقْ

Powered by CamScanner

صَلَّى الْاِلٰهُ الْمَنَّانْ ... عَلَى النَّبِيِّ الْفُرْقَانْ
وَالْاٰلِ وَلِيِّ الْاِحْسَانْ ... وَاِمَامِ جَعْفَرِ الصَّادِقْ

ذَا اَشْرَفُ الْخَلَائِقْ ... ذَا اَعْلَمُ الْحَقَائِقْ
ذَا اَفْهَمُ الدَّقَائِقْ ... اَلشَّيْخْ جَعْفَرْ صَادِقْ

شَمْسُ الْعُلٰى الْمُنَوَّرْ ... بَدْرُ الدُّجٰى الْمُقَمَّرْ
نُوْرُ الْهُدٰى الْمُفَخَّرْ ... اَعْنِيْ بِجَعْفَرْ صَادِقْ

حُسْنُ الْاَنَامِ خُلْقًا ... صِدْقُ الْكَلَامِ وُثُقًا
بُرْءُ السَّقَامِ حَقًّا ... اَعْظِمْ بِجَعْفَرْ صَادِقْ

یَا رَبُّ مَلِکُ الْوَافِقْ — صَلِّ لِطٰہٰ الصَّادِقْ

مَا دَامَ مَدْحُ الشَّائِقْ — اَلْاِمَامِ جَعْفَرْ صَادِقْ

بِسْمِ اللّٰہِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

مَنَافِعُ الْحَقَائِقِ

بترجمہ

قَصِیْدَۃُ جَعْفَرِ الصَّادِقِ

یَا پَنْجتَن بَچَا نَا ہو نُمْ طَرَح

حَمْدًا لِلّٰہِ الْخَالِقْ — رَبِّ الْاَنَامِ الرَّازِقْ

اُہْدِیْ بِمَدْحِ الْفَائِقْ — لِلْاِمَامِ جَعْفَرْ صَادِقْ

أَلَآ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

هٰذه قصائد الفائق علٰے حبيب الواثق
السيد الشيخ الامام جعفر الصادق
رضي الله عنه الباري الخالق المسماة ب

مَنَافِعُ الحَقَائِق

بترجمة

قَصَائِدِ جَعْفَرِ الصَّادِقِؓ

نظمها وترجمها بلسان التملي الفقير الحاج
الناهوري غلام دستگیر اللقبی ، بنا نا صاحب
الشطاري القادري كان له الملك القوي

باهتمام خادم محمد حسین صاحب قادری ناهوری

۱۳۴۲ھ

எமது நன்னூலகம் வெளியீடுகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

1. கஸீதத்துல் புர்தாஹ் (ரகசியக் குறிப்புகள்)
2. சத்தியசீலர்கள் பத்ரு ஸஹாபாக்கள்.
3. ரமலான் மாலையும் லைலத்துல் கத்ர்-இரவு சிறப்பு.
4. இமாம் ஜாஃபர் சாதிக் நாயகம் மகிமை.
5. "மெஞ்ஞான ஜோதி" முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)
6. அற்புத ஜோதி ஆரிஃப் நாயகம்.
7. குத்பே இர்ஷாத் மாபெரும் ஜோதி. காஜா முயினுத்தீன் சிஷ்த்தி (அஜ்மீரி)
8. காருண்ய ஜோதி நாகூர் பாதுஷா நாயகம்.
9. சன்மார்க்க ஜோதி இபுறாஹீம் ஷஹீது ஏர்வாடி.
10. மனம் குளிர்ந்த மாதரசி நாகூர் சுல்தான் பீவி அம்மாள்
11. பத்து நாயகிமார்களின் கிஸ்ஸாவும்- பாத்திஹா ஓதும் முறையும்

أَلَآ إِنَّ أَوْلِيَاءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

هذه قصائد الفائق على حبيب الوائق

السيد الشيخ الامام جعفر الصادق

رضی اللہ عنہ الباری الخالق المسماۃ ب

منافع الحقائق

بترجمہ

قصائدِ جعفر الصادقِ

نظمها و رقمها بلسان التملی الفقیر الحاج

الناهوری غلام دستگیر اللقبی ، بنانا صاحب

الشطاری القادری کان له الملک القوی

باهتمام خادم محمد حسین صاحب قادری ناهوری

۱۳۷۲ھ